# கண்ணனின் பக்தி அறம், பொருள், இன்பம்,முக்தி தரும்!

சம்ஸ்கிருத செல்வம்--அத்தியாயம் 23

ச.நாகராஜன்

Post No. 811 Date 1st February 2014

புருஷார்த்தம் என்பது நான்கு. தர்ம, அர்த்த, காம மோக்ஷ ஆகியவையே புருஷார்த்தம் எனப்படும். தமிழில் இவற்றை முறையே அறம், பொருள், இன்பம், முக்தி என்று கூறுவர். இந்த நான்கையும் ஒரு சேரப் பெற எளிய வழி ஒன்று உண்டு என்பதைக் கண்டு கொண்ட லீலா சுகர் அதைப் பெருங்கருணையால் நமக்கும் தெரிவிக்கிறார் தனது ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம் என்னும் நூலில்.

**பக்திஸ்தவயி ஸ்திரதரா பகவன் யதி ஸ்யாத்**
**தைவேன ந: பலித-திவ்ய-கிசோர-வேஷே I**
**முக்தி: ஸ்வயம் முகுலிதாஞ்சலி ஸேவதேஸ்மான்**
**தர்மார்த்த காம கதய: ஸமயப்ரதீக்ஷா II**

இதன் பொருளைப் பார்ப்போம்:-

**பகவன்** - ஓ! பகவானே!

**ந:** - எங்களுடைய

**தைவேன** - பூர்வபுண்ணிய வசமாக

**பலித-திவ்ய-கிசோர-வேஷே** - திவ்வியமான இளம் பிள்ளை வடிவு கொண்டு விளங்கும்

**த்வயி** - உன்னிடத்தில்

**ஸ்திரதரா** - நன்றாக நிலைத்த

**பக்தி:** - பக்தியானது

**ஸ்யாத் யதி** - இருக்குமானால்
**முக்தி**: - முக்தியானது
**ஸ்வயம்** - தானாகவே
**முகுலிதாஞ்சலி - கூப்பிய கையுடன்**
**அஸ்மான்** - என்னை
**ஸேவதே** - வந்தடையும்
**தர்மார்த்த காம கதய:- அறம்,பொருள்,இன்பம் ஆகியவற்றின் பயன்கள்**

**ஸமயப்ரதீக்ஷா - வந்து சேர வேண்டிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பனவாகும்**

ஓ! பகவானே! எங்களுடைய பூர்வபுண்ணிய வசமாக திவ்வியமான இளம் பிள்ளை வடிவு கொண்டு விளங்கும் உன்னிடத்தில் நன்றாக நிலைத்த பக்தியானது இருக்குமானால் முக்தியானது தானாகவே **கூப்பிய கையுடன்** என்னை வந்தடையும். எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தைகள்!

முதலாவது ஆஸ்வாஸத்தில், 107வது ஸ்லோகமாக அமைகிறது இது.

கண்ணனின் மீது தீராத பக்தி கொள்வோம். அறம், பொருள்,இன்பம், முக்தி ஆகிய புருஷார்த்தத்தை அடைவோம்!

(பதம் பிரித்து அர்த்தம் தரும் ஸ்ரீ கிருஷ்ணகர்ணாம்ருதம் நூல் உரையாசிரியர் அண்ணாவால் உரை செய்யப்பட்டு சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தலைவரால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ராமகிருஷ்ண மடத்திற்கு நமது நன்றி!